செ.வெ.எண்: 16 நாள்: 07.03.2017

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.65.52 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகள் துவக்க விழா நிகழ்ச்சியினை காணொலிக்காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.65.52 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகள் துவக்கவிழா மற்றும் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குடுமியான்மலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு புதிதாக கட்டப்பட்டுள்ள நிர்வாக கட்டிடம், மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதி, வளாக வசதி, பண்ணை அலுவலகம் மற்றும் இதரப்பயன்பாட்டு கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (7.3.2016) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்ததையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இனிப்புகள் வழங்கி தெரிவித்ததாவது:

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டு கால பொற்கால ஆட்சியில் தமிழ்நாட்டில் துவங்கப்பட்ட 3 அரசு வேளாண்மைக்கல்லூரிகளில் புதுக்கோட்டை மாவட்ட குடுமியான்மலை வேளாண்மைஅரசுக்கல்லூரியும் ஒன்று. அம்மா அவர்கள் வேளாண்மை அரசுகல்லூரியை விரிவுப்படுத்தும் நோக்கில் 110-ம் விதியின் கீழ் குடுமியான்மலை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு புதிதாக கட்டப்படவுள்ள நிர்வாக கட்டிடம், மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதி, வளாக வசதி, பண்ணை அலுவலகம் மற்றும் இதரப்பயன்பாட்டு கட்டடம் கட்டுவதற்காக ரூ.27.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி மூலம் அடிக்கல் நாட்டி பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 2 ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதிகள், கால்நடைபராமரிப்புத்துறையின் சார்பில் ரூ.0.42 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 2 கால்நடை மருந்தகங்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் சார்பில் ரூ.0.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட பள்ளி மாணவர்கள் தங்கும் விடுதி, காவல்துறையின் சார்பில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் 6 புதிய காவல் நிலையங்கள், வருவாய்த்துறையின் சார்பில் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலக கட்டடம், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ரூ.9.55 கோடி மதிப்பீட்டில் 15 புதிய பள்ளிக்கட்டடம், கூடுதல் பள்ளிக்கட்டடம், ரூ.0.5 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 20 மெய்நிகர் வகுப்பறைகள், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.17.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 473 பல்வேறு கட்டடங்கள், மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் 1 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் 2 தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ.0.10 கோடி மதிப்பீட்டில் அம்மா மருந்தகம், ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் 2 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் கட்டடம், ரூ.0.25 கோடி மதிப்பீட்டில் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம், ரூ.0.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் நவீன மயமாக்கப்பட்ட வங்கிக்கட்டடம் என மொத்தம் ரூ.65.52 கோடி மதிப்பீட்டில் 529 புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகள் துவக்க விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக்காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய புதிய திட்டப்பணிகள் மூலம் மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறுவர் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், வேளாண்மை பல்கலைக்கழக முதல்வர் முனைவர்.திரு.செங்குட்டுவன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.செங்கோட்டுவேல், வேளாண்மை பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**